# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

**11.05.2026** **துளிகள் – 19**

## தாகம் உள்ளவர்கள் 'பரிசுத்தாவி அபிஷேகம்' நிச்சயம் பெறுவர்!

"அவர்கள் பிரிகியா, கலாத்தியா, நாடுகளைக் கடந்துபோன போது, ஆசியாவிலே வசனத்தை சொல்லாதபடிக்கு பரிசுத்தாவியினாலே தடைபண்ணப்பட்டார்கள்!" என வாசிக்கிறோம். இதை வாசிக்கும் நீங்கள் "என்ன, மற்ற எல்லா இடங்களையும் போல் ஆசியா நாட்டிற்கும் பரிசுத்தாவியானவர் தேவையில்லையா?" என கேட்கலாம். அங்கும், பரிசுத்தாவியானவர் நிச்சயம் தேவைதான்! ஆனால் பரிசுத்தாவியானவர் ஒருவர் மாத்திரமே "பரிசுத்தாவியை பெற யார் ஆயத்தமாயிருக்கிறார்கள்?" என்பதை அறிவார்! தேவை அதிகமாயிருந்தும் ஜனங்கள் பெற்றுகொள்ள ஆயத்தமில்லாமல் இருக்கலாம். உங்களுக்கு ஏராளமான தேவைகள் இருக்கலாம்... ஆனால், அவைகளை நீங்கள் வாங்குவதற்கு ஆயத்தமில்லையென்றால், உங்களால் பெற்று கொள்ள முடியாதல்லவா? ஆகவே "பரிசுத்தாவியைப் பெற, பசியும் தாகமுமாயிருப்பதே" ஆயத்தநிலை என்பதை அறிந்து, உங்களை ஆயத்தமாய் வைத்து அவரை கூப்பிடுங்கள்!

**– ரத்னம்**